# ஔவையார் குறள்

**Aouvaiyar Kural**

---

தருமம் பொருள் காமம் விடெனும் நான்கும்
உருவத்தா லாய பயன்.

ஈச னெனக்கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீ நினைந்து கொள்.

மெய்ப்பால் அறியாத மூடர்தம் நெஞ்சத்தின்
அப்பாலே நிற்குஞ் சிவம்.

உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட ஈசனைத் தேடு.

தன்னை யறியு மறிவு தனைப்பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு.

எண்ணிறந்த யோனி பலவாய்ப் பரிந்தெங்கும்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.

விண்ணிறைந்து நின்ற சுடர்போலச் சீவர்கள்
கண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.

நினைப்பும் மறப்புமில் லாதவர் நெஞ்சந்
தனைப்பிரி யாது சிவம்.

நரம்பெனும் நாடியிடை மினுக்கெல்லாம்
உரம்பெறும் நாடியொன் றுண்டு.

உந்தி முதலாகி ஓங்காரத் துட்பொருளாய்
நின்றது நாடி நிலை.

உந்தியி னுள்ளே ஒருங்கச் சுடர்பாய்ச்சில்
அந்தி யழலுருவ மாம்.

நாபி யகத்தே நலனுற நோக்கிடில்
சாவது மில்லை யுடம்பு.

ஆவிபாழ் போகா தடக்கி யிருந்தபின்
ஓவிய மாகு முடம்பு.

மயிர்க்கால் வழியெல்லாம் மாய்கின்ற வாயு
உயிர்ப்பின்றி யுள்ளே பதி.

மூலத்திற் றோன்றி முடிவிலிரு நான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங் காண்.

வாசலி ரைந்து மயங்கிய வாயுவை
ஈசன்றன் வாசலி லேற்று.

சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோ னூடுருவில்
முத்திகு மூலம் அது.

வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுட் பெருக்கமுண் டாம்.

அசபை யறிந்துள்ளே அழலெழ நோக்கில்
இசையாது மண்ணிற் பிறப்பு.

ஓசையி னுள்ளே உதிக்கின்ற தொன்றுண்டு
வாசமலர் நாற்றம்போல் வந்து.

துரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு.

அடைத்திட்ட வாசலின் மேல்மனம் வைத்துப்
படைத்தவன் தன்னையே பார்.

எழுஞ்சுட ருச்சியின் மேல்மனம் வைக்கத்
தொழிலொன் றிலாத சுடர்.

கண்ணகத்தே நின்று களி தருமே காணுங்கால்
உன்னகத்தே நின்ற வொளி.

உரைசெயு மோசை உரைசெய் பவர்க்கு
நரைதிரை யில்லை நமன்.

பேசு மெழுத்துடன் பேசா எழுத்துறில்
ஆசான் பரநந்தி யாம்.

நின்ற எழுத்துடன் நில்லா எழுத்தினை
ஒன்றுவிக்கி லோன்றே யுளது.

வாக்கும் மனமும் இறந்த பொருள் காணில்
ஆக்கைக் கழிவில்லை யாம்.

கூடகமான குறியெழுத்தைத் தானறியில்
விடக மாகும் விரைந்து.

பிறச்திட மாலிடம் பேரா திருப்பின்
இறந்தடம் வன்னி யிடல்.

வலத்தில் சனிக்கே யிராப்பகல் வாயு

செலுத்துப்பே ராது செயல்.

மயிர் முனையிற் பாதி மனத்தறி வுண்டேல்
அயிர்ப்புண்டங் காதி நிலை.

உறக்கம் உணர்வு பசிகெடப் பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு.

நினைப்பும் மறப்பும் நெடும் பசியும் அற்றால்
அனைத்துலகும் வீடாம் அது.

மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவா திறவார் பினை.

அண்டத் திலுமிந்த வாறென் றறிந்திடு
பிண்டத் திலுமதுவே பேசு.

சூரியன் வன்னியொன் றாகிடிற் சோமனாம்
பாருமின் ஈது பயன்.

மதியொடு வன்னியொன் றாகவே வந்தால்
கதிரவ னாமென்று காண்.

தோற்றுங் கதிரவன் வந்தங் கொடுங்கில்
உதிக்குமாம் பூரணைச் சொல்.

---

முதற்பக்கம் Front Page   பொருளடக்கம் Contents Page

---